இந்து தமிழ் திசை

4 CHENNAI சனி, மே 25, 2019

# ஸ்ரீ ராமச்சந்திரா பல் மருத்துவமனையில் 3 நாள் இலவச முகாம்

■ சென்னை

வாயில் ஏற்படும் புற்றுநோயை கண்டறியும் இலவச முகாம் போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா பல் மருத்துவமனையில் வரும் மே 30, 31 மற்றும் ஜூன் 1 ஆகிய தேதிகளில் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறுகிறது.

வாய்ப் பகுதியில் தொடர்ந்து நாள்பட்ட புண் இருப்பது, சாப்பிடும்போது எரிச்சல் தோன்றுவது, தேவையற்ற சதை வளர்ச்சி மற்றும் வீக்கம், நாள்பட்ட வெண்ணிறப் படை உள்ளவர்களும், புகைபிடிப்பவர்கள், புகையிலை, தொடர்ந்து பான் மசாலா, பாக்கு மெல்லும் பழக்கம் உள்ளவர்கள் ஆகியோருக்கு இலவசமாக பரிசோதனைகள் செய்யப்படும்.

அடிப்படை ரத்த மற்றும் சதை பரிசோதனை, தாடை எக்ஸ்ரே போன்றவை இலவசமாகவும், தாடை ஸ்கேன் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவை சலுகை கட்டணத்திலும் செய்யப்படும்.

உலக புகையிலை மறுப்பு தினத்தை முன்னிட்டு, ஸ்ரீ ராமச்சந்திரா பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் வாய்நோய் அறிதல் மற்றும் கதிரியக்கத் துறை இந்த இலவச முகாமை நடத்துகிறது.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.